எழிலுறு காட்சிகளுடன்
அழகுறப் படம் பிடித்திட
விஜயம் செய்யுங்கள்
அஜந்தா
போட்டோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள ரமான நிகழ்ச்சிகளை
நிகரெனத் துலங்கிட
வீடியோ படமாக்கிக்
கொள்வதற்கு
அஜந்தா
வீடியோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 03 செவ்வாய்க்கிழமை (17 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily இதழ் 170

## காமினிக்காக தமது பதவியை விட்டுக் கொடுக்க

# தேசியபட்டியல் எம்.பிக்கள் இணங்காவிடில்

# நாடாளுமன்றை கலைக்கவும் டி.பி. திட்டம்

### ரூ.8 கோடி தர முன்வந்தும் எவரும் ராஜினாமாச் செய்யத் தயாரில்லை

கொழும்பு, மே 17

காமினி திஸநாயக்காவை எம்: பியாக்கி பின்னர் அமைச்சராக்குவதற்கு வசதியாக தமது பதவியை இராஜினாமாச் செய்ய ஐ. தே. கவின் தேசியப் பட்டியல் எம். பிக்களில் ஒருவர் கூட முன்வராவிட்டால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தயங்கமாட்டார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையே —

பதவியை இராஜினாமாச் செய்வதற்கு கைம்மாறாக எட்டுக் கோடி ரூபா வரை பணம் கொடுக்க முன்வந்தும் தமது எம். பி. பதவியைத் துறக்க ஐ. தே. கவின் தேசியப் பட்டியல் எம். பிக்கள் எவரும் இணங்கவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம்.பிக்களுடன் இது விடயமாகத் தாம் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளின் விளைவுகளை அடுத்த மூன்று தினங்களில் முழு நாடுமே தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர்கள் தொண்டமான், கே. என். சொக்ஸி உட்பட 15 பேர் ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் எம். பிக்களாக உள்ளனர்.

இவர்களில் ஒருசாராரி மீதே இராஜினாமாச் செய்யும்படி அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால் எவரும் பதவிவிலக முன்வரவில்லை.

பதவிவிலக முன்வந்த இரு எம். பிக்கள் கூட [illegible] அவர் [illegible] சஜித்துக்கும் நாடாளுமன்றத்தில் இடமளிப்பதானால் மட்டுமே பதவி விலக முடியும் என நிபந்தனை விதித்துள்ளனர்.

காமினி திஸநாக்காவை அமைச்சராக்கும் தமது அபிலாஷையை ஜனாதிபதி விஜேதுங்கா நிறைவேற்ற முடியாத நிலையில் —

நாடாளுமன்றத்தின் இன்னொரு அமர்வு இன்று ஆரம்ப

[4 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ். பல்கலைக்கு இம்முறை 517 மாணவர்கள் அனுமதி

யாழ்ப்பாணம், மே 17

1992 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடந்த ஜி. சி. ஈ (உயர்தர) பரீட்சையில் தோற்றியவர்களில் 517 மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

மேற்படி பரீட்சையில் இருந்து 93/94 ஆம் கல்வியாண்டுக்கு தெரிவான மாணவர்கள் விபரப் பட்டியல் யாழ் பல்கலைக்கழகத்துக்கு கிடைத்துள்ளது.

கடந்த வருடம் 417 மாணவர்கள் யாழ் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றிருந்தனர்.

இவ்வாண்டு அனுமதி பெற்ற மாணவர்களின் விபரம் துறைகளும் வருமாறு:-

மருத்துவம் 64, விவசாயம்— 24, உயிரியல் விஞ்ஞானம்— 46, பௌதிக விஞ்ஞானம்— 83, முகாமைத்துவம— 47, கலை— 154, வர்த்தகம் — 99. (உ-3)

### கடந்த ஆண்டு பதிவு செய்யத் தவறிய

### 91 மாணவருக்குப் பதிலாக 23பேருக்கு மட்டுமே அனுமதி

யாழ்ப்பாணம், மே 17

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 92/93 கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்யாத 91 மாணவர்களுக்கு பதிலாக 23 புதிய மாணவர்களை மட்டுமே அனுமதிக்க பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். பல்கலைக் கழகத்துக்கு 92/93 கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் — பௌதிக விஞ்ஞானத்துக்கு 48 பேரும், உயிரியல் விஞ்ஞானத்துக்கு 21 பேரும், மருத்துவத்துக்கு 4 பேரும், விவசாயத்துக்கு 6 பேரும், வர்த்தகத்துக்கு 10 பேரும், கலைக்கு 7 பேருமாக- மொத்தம் 91 மாணவர்கள் தமது பதிவை மேற்கொள்ளவில்லை.

இவர்களின் இடங்களுக்கு புதிய மாணவர்களை நியமிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையின் பயனாக உயிரியல் விஞ்ஞானத்துக்கு எட்டுப் பேரும், பௌதிக விஞ்ஞானத்துக்கு 15 பேருமாக - மொத்தம் 23 பேருக்கு மட்டும் — பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. (உ-3)

### 3,400 பேரின் அடையாள அட்டை அடுத்த கப்பலில்

யாழ். மாவட்டத்தில் இருந்து அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 3 ஆயிரத்து 400 பேரின் அடையாள அட்டைகள் அடுத்தவரும் கப்பலில் வரவிருக்கின்றன.

இந்தத்தகவல் கொழும்பில் இருந்து நேற்றுக்கிடைத்ததாக அரச அதிபர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் விதவை ஓய்வூதியம் பெறுவோரின் கோவைகளும் அக்கப்பலில் எடுத்துவரப்பட இருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார் (உ-3)

### பேராதனை பல்கலை. 30 ஆம் திகதி திறப்பு

கொழும்பு, மே 17

பேராதனைப் பல்கலைக் கழகம் மீண்டும் எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படும் என்று சிரேஷ்ட பதிவாளர் விமல் திஸாநாயக்கா அறிவித்துள்ளார்.

அனைத்துப் பீடங்களும் இத் திகதியில் மீண்டும் திறக்கப்பட்ட பின் இடையில் கைவிடப்பட்ட பரீட்சைகள் இரண்டு வார விடுமுறையில் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி அங்கு ஏற்பட்ட விடுதிப் பிரச்சினை காரணமாக பல்கலைக் கழகம் மூடப்பட்டது தெரிந்ததே. (ஐ-3)

### இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 17

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமைவழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (உ-5)

# பதில் தாக்குதலுக்கு புலிகள் தயாராகி வருகின்றனராம்!

பணிலா, மே 17

யாழ். குடாநாட்டின் மீது படையினர் நடத்த உத்தேசித்துள்ள இறுதித் தாக்குதலை வெற்றிகரமாக எதிர் கொள்ளும் முகமாக விடுதலைப் புலிகளும் தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

—'வெரித்தாஸ் வானொலி' நேற்று இவ்வாறு அறிவித்தது.

விமானத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பதுங்குகுழிகளை அமைக்கும் பணிகளில் புலிகள் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்களையும் பதுங்கு குழிகளை அமைக்கும் படி அவர்கள் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தாக்குதல்களை எதிர்பார்க்கும் புலிகள்- படையினர் எம்முனையில் இருந்து தாக்குதலை ஆரம்பிப்பர் என்று தெரியாத நிலையில்— பன்முனைத் தாக்குதல்களை எதிர் கொள்ளத் தயாராகி வருகின்றனர்.

வருட இறுதியில் தேர்தல்கள் நடைபெற இருப்பதால் புலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தி, அதில் வெற்றி பெறுவதன் மூலம் சிங்கள [illegible] வாக்குகளை கவரலாம் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



கோடி கோடியாக் கொட்டினாலும் கெட்டியாப் பிடிச்ச பதவியை விடாத கெட்டிக் காரர்தான் உவையள்... !

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்

### டி.பியை தோல்வியடையச் செய்ய சில ஆளும்கட்சி எம்.பிக்கள் முடிவு

கொழும்பு, மே 17

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடவிருக்கும் வேட்பாளரான ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு ஆதரவளிக்காதிருக்க ஆளும்கட்சியின் எம். பிக்கள் சிலர் முடிவு செய்திருப்பதாக கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

ஆளும் கட்சி தேர்தலில் வெற்றியீட்டாதிருப்பதை நிச்சயப்படுத்தும் நடவடிக்கையில் இந்த ஆளும் கட்சி எம். பிக்கள் அவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் பொலீஸ் அதிகாரிகள் சிலர் திட்டமிட்டு முடிவெடுத்துள்ளனர் என்று தகவலறிந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கருத்துக்களைக்கொண்ட அரசியல்வாதிகளின் வீடுகளை சோதனையிடுவதற்கு பொலி

[4 ஆம் பக்கம் பார்க்க]

### டி. பியின் தேர்தல் பிரசாரம் 29 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, மே 17

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை கண்டி மாவட்டத்தில் இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பிக்கவிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அன்றையதினம் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி எம். பிக்கள், அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் ஆகியோர் மத்தியில் ஜனாதிபதி விஜேதுங்க

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் - முஸ்லிம் கட்சிகள் இணைந்து

# தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க முயற்சி

### பல தரப்பினருடனும் தொண்டமான் பேச்சு

கொழும்பு, மே 17

மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்திருந்த யோசனைகளை அடிப்படையாகக் கொண்டே, இனப்பிரச்சினைக்கு பொதுவான அணுகுமுறையுடனான தீர்வு யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் கொழும்பில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் தலைமையிலான குழுவினருடன் அமைச்சர் தொண்டமான் பேச்சு நடத்தினார்.

அப்பேச்சுக்களின்போது கூட்டணி சார்பில் முன்னாள் எம்பிக்களான இரா. சம்பந்தன், அ. தங்கத்துரை, வீ. ஆனந்தசங்கரி மற்றும் கலாநிதி நீலன்திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை ஈ. பி. ஆர். எல். எவ் குழுவுடன் தொண்டமான் பேச்சு நடத்தினார். ஈ. பி. ஆர். எல். எவ் குழுவில் அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், எம். சேதீஸ்வரன், டி. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுக்களின் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் குழுக்கள், கட்சிகளுடனும் தொண்டமான் தனித்தனியாக பேசியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தொடர் பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதும், அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகக்கூடி பேச்சுக்களை நடத்தி, தமிழர் மற்றும் முஸ்லிம்கள் சார்பில் பொதுவான அணுகுமுறையை மையமாகக் கொண்ட தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அரசாங்கத்துக்குச் சமர்ப்பிப்பதே இம்முயற்சியின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

### தென்னாபிரிக்கா போன்று இலங்கையிலும் தீர்வு

#### சந்திரிக்கா கூறுகிறார்

கொழும்பு, மே 17

தென்னாபிரிக்கத் தலைவர்களைப் பின்பற்றி நாமும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

''தென் ஆபிரிக்காவின் அரசியல் நிலை மாற்றமும் இலங்கைப் பிரச்சினையுடன் அதற்குள்ள தொடர்பும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று கடந்த வியாழக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா

(3 ஆம் பக்கம் பார்க்க)

### அதிபர் பதவி ஏற்காதோரின் பதவி நிலை ரத்தாகும்

யாழ்ப்பாணம், மே 17

அதிபர் பதவி உயர்வு தரம் கிடைத்தும் அதிபர் பதவியை ஏற்காத ஆசிரியர்களின் அதிபர் தரத்தை ரத்துச்செய்ய கல்விச்சேவை ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான கல்விச் சேவை ஆணைக்குழுவின் ஆ/4/25 இலக்க — 12-4-94 திகதியிடப்பட்ட — சுற்றுநிருபம் பிரதேச கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச கல்வி அலுவலகங்களுக்கு மாகாண கல்வி அமைச்சால் அனுப்பப்பட்ட மேற்படி சுற்றுநிருபம் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு நேற்று கிடைத்தது.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற அதிபர் பதவி உயர்வு பரீட்சையில் சித்திபெற்று அதிபர் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்ட ஆசிரியர்களில், இதுவரை அதிபர் பதவியை ஏற்காத ஆசிரியர்களின் பதவி உயர்வு ரத்துச் செய்யப்படுவதாகவும் —

அத்தகையோரின் விபரங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்புமாறும் —

கல்விச்சேவை ஆணைக்குழு அந்த சுற்றுநிருபத்தில் கேட்டுள்ளது. (உ-3)

### 'குட்டி பட்ஜெட்' இன்று நடாளுமன்றில்

கொழும்பு, மே 17

ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள மினி (குட்டி) பட்ஜட் மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

நிதி அமைச்சரும், நிதி ராஜாங்க அமைச்சருமான ஹேரொல்ட் ஹேரத் இத்த [illegible] நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பார்.

1993 ஆம் நிதியாண்டு தொடர்பான அரசாங்க அலுவலர்களின் முற்பண கணக்குகளின் எல்லைகளை மாற்ற இப்பிரேரணை வழி செய்கிறது.

இதுதவிர ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான வேறு 19 பிரேரணைகளும் நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இடம் பெற்றுள்ளன.

## அனுமதி பெறாமல்

### தென்னை மரத்தை வெட்டிய மாகாண உறுப்பினர் கைது!

கொழும்பு, மே 17

மேல் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினரான பிரேமச்சந்திர ரணவீர தென்னை மரங்களை அனுமதியின்றி வெட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

மயான வளவு ஒன்றில் காணப்பட்ட தென்னை மரங்களை அனுமதியின்றி வெட்டி, ஏலம் விட்டார் என்ற குற்றச்சாட்டின் மீது இவரை கியாங்கெடப் பொலிஸார் கைது செய்து, அத்தனகல நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

## சதி குறித்து செய்தி வெளியிட்ட

### ''ராவய'' மீது கூரே வழக்கு ரூ.10 கோடி நஷ்டஈடு கோரி

அரசாங்கத்தைக் கவிழ்க்க இராணுவ மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுடன் சேர்ந்து அமைச்சர் சிறிசேன கூரே சதி செய்ததாக ''ராவய'' சிங்கள வார இதழ் வெளியிட்ட செய்தி தொடர்பாக, அப்பத்திரிகைக்கு எதிராக பத்துக் கோடி ரூபா நஷ்டஈடு கோரி வழக்குத் தொடருவதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் கூரே மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'ராவய' செய்தி தமக்கு அபகீர்த்தி மற்றும் பாரிய இழப்புகளை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்ய சிறிசேன கூரே நடவடிக்கை எடுத்து வருகிறாராம். (உ-எ-6)

### ஜனாதிபதி வேட்பாளர் யார்? 23 ஆம் திகதி சு. க. முடிவு

#### 8 வருடங்களின் பின் கட்சிக் கூட்டம்

கொழும்பு, மே 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர் யார் என்பதை இம்மாதம் 23 ஆம் திகதி கூடவிருக்கும் கட்சியின் நிறைவேற்றுக் குழு முடிவு செய்யும் என்று தெரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 'ருகுணு' புறப்பாடு 'மாஹோ' வருகிறது

வடமராட்சி, மே 27

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கும் வேலையை முடித்துக்கொண்டு 'ருகுணு' கப்பல் நேற்று கொழும்பு புறப்பட்டுச் சென்றது.

இதேவேளை ஒரு தொகுதி மாவினை ஏற்றிக் கொண்டு 'மாஹோ' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-173-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொக்குவில்கிழக்கு நர்க்கை அம்மன் வீதியில் இருபக்கமும் ஒழுங்கை முகப்புடைய 2 பரப்பு 6 குழி காணி, மூன்று பக்கமும் சுற்றுமதிலும் புதிய கிணறுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 102/3, பொற்பதி வீதி, கொக்குவில். (7386)

கொக்குவில் பொற்பதி வீதி இல. 106, நல்லூர் ப. நோ. கூ. சங்கக்கிளை - 3 கடைக்குப் பின்னுள்ள 4 பரப்பு 3½ குழி காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடும், காணியும் விற்பனைக்குண்டு தொடர்பு: இல. 102/3, பொற்பதி வீதி, கொக்குவில். (7385)

நல்லின இரண்டு மாத சேவல் குஞ்சுகளும் [கிறாத்து நிலைக்குரியவை] சேவல் குஞ்சுகளும், இறைச்சிக்கோழிகளும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப், செட்டி பண்ணை, இராஜ வீதி, கோப்பாய். [ஓ-8163]

## உடன் விற்பனை

புறொயிலர் கோழிக்குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு. 702, K.K.S. வீதி, சிவலிங்க புளியடி, யாழ்ப்பாணம். (30917)

## வெளிவந்துவிட்டது

ஆண்டு 8 சுற்றாடற்கல்வி செயல்நூல் விற்பனையாகிறது. தேசிய கல்வி நிறுவனத்தின் 1994 பாடத்திட்டத்திற்கமைய ஆக்கப்பெற்றது. ஆக்கம்: த. துரைசிங்கம், ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (30901)

## அக்கரைச்சீமையில

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில் 50/-. ஆசிரியரது 45 வருடகால எழுத்துலக அனுபவம் நாவலில் மிளிர்கிறது. சுவையான சமகாலக் கதை. [30691]

## உழுந்து உடைத்தல்

வியாபாரிகளே உங்களிடம் உள்ள உழுந்தை இயந்திரத்தால் உடைத்து பருப்பாக்கி கொடுக்கப்படும். ஒரு கிலோவுக்கு கூலி ஒரு ரூபாய் மட்டும். விபரங்களுக்கு: பா. சதீஸ், 80, மார்க்கட் பாய்க்கடை, யாழ்ப்பாணம். (7380)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மே. 17

சாரணிய சேவையில் 30 வருடங்களுக்கு மேலாக சேவை புரிந்து, தற்பொழுது மாவட்ட ஆணையாளராக பதவி ஏற்றிருக்கும் திருமதி ஞா. அருட்பிரகாசம் அவர்களுக்கு அண்மையில் பாராட்டுவிழா ஒன்று நடத்தப்பட்டது.

வட்டார ஆணையாளர் திருமதி. க. நவரட்ணராசா தலைமையில் வேம்படி மகளிர் கல்லூரியில் சாரணிய ஆணையாளர்களும் வழிகாட்டுநரும் நடத்திய மேற்படி பாராட்டு விழாவில் வலயம் I கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றினார். (ஓ)

## வலைப்பந்தாட்டம்

சாவகச்சேரி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை புதன்கிழமை சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஓ-31)

## 'கோமார்' கப்பல்

யாழ்ப்பாணம், மே. 17

கொழும்பு துறைமுகத்தில் 'கோமாரி' கப்பலில் பொருள்கள் ஏற்றும் பணி நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறையில் இருந்து கொழும்பு சென்ற கோமாரியில் உடன் பொருள்கள் ஏற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டதாகவும்—

அடுத்த வாரமளவில் இக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மே. 17

கள் இறக்குவதற்காக பனை மரத்தில் ஏறியவர் மரத்தில் இருந்து விழுந்து மரணமானார்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த நாகையா அப்புத்துரை (வயது 65) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஓ-15)

## மணமகன் தேவை

மிருகசீரிடம், 2ஆம் பாதம், 27 வயதுடைய பெண்ணுக்கு உள்ளூரில் தொழில்புரியும் அல்லது அரசாங்க தொழில் செய்யும் மணமகன் தேவை 642, சே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (30916)

## தவறிவிட்டது

14-05-94 அன்று இருபாலைச் சந்திக்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் நோட்டுப் புத்தகங்கள் அடங்கிய பொதி தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும் சக்தி வீடியோ சென்ரர், இருபாலை சந்தி அல்லது சரஸ்வதி விலாஸ், கோப்பாய். (30918)

# விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடத்தும்

# கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும், கிராமிய ஆட்ட கலை விழாவும்

05-07-1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழ வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக செயலகங்களில் 02-06-1994 க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

## அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக் கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

## பொது அறிவுறுத்தல்கள்

1. கலை வடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளை யொட்டியதாகவும், கலையம்சம் நிறைந்ததாகவும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்.)
3. (அ) சிறந்த நடிகர்
   (ஆ) சிறந்த நடிகை
   (இ) சிறந்த நெறியாள்கை
   (ஈ) சிறந்த எழுத்துரு
   (உ) சிறந்த இசையமைப்பு
   (ஊ) சிறந்த வேடப்புனைவு

   என்பவற்றிற்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

## சிறுவர் அரங்கு

சிறுவர்களின் வயதிற்கும் உளவளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமைய வேண்டும். அத்துடன் நாடக அளிக்கையில் சிறார்களே பங்குகொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக் கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

## பொது அறிவுறுத்தல்கள்

(அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரை உள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்.

(ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். 2 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைத்தல் வேண்டும். (5 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்.

(உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

## கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்

1. கோலாட்டம்
2. கரகம்
3. ஆட்டக்காவடி
4. கும்மி

## பொது அறிவுறுத்தல்கள்

(அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

✲ குறிப்பு

(அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

(இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும். மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.

(ஈ) மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்,
தமிழீழம்.

# அரசாங்க அறிவித்தல்

மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
சுகாதாரசேவைகள் யாழ்ப்பாணம்

## 1994 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுக்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருள்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து மறுபக்கத்தில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்
2. பாவனைப் பொருள்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்)
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்
4. மரத்தளபாடங்கள், மரத்தளபாட திருத்த வேலைகள்
5. உருக்குத் தளபாடங்கள், உருக்குத் தளபாட திருத்த வேலைகள்
6. பிளாஸ்டிக் பொருள்கள் (வாளி, குப்பைக்கூடை, கூப்பைவாளி முதலியன)
7. இரும்பு, பித்தளை, கல இரும்புப் பொருள்கள், ஆமைப்பூட்டுக்கள், வாளி வகைகள், குப்பை வாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியவை
8. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
9. வைத்தியசாலை உபகரணங்கள் (சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள், சிறுகட்டில்கள் சத்திரசிகிச்சை உபகரண நிலைகள்)
10. கட்டடத்திருத்தத்திற்கு அவசியமான பொருள்கள், கட்டடத் திருத்தம்
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூ உட்பட)

### பதிவு செய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்
4. கிராமோதய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6. சனசமூக நிலையங்கள்
7. வருமான வரி செலுத்தும் பிரசித்திபெற்ற நிறுவனங்கள்

### விண்ணப்பித்தல்

மேற்படி வழங்குநர்களாகப் பதிவுசெய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எமது பணிமனையில் ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 01-06-1994 புதன்கிழமை காலை 11-00 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1994 ஆண்டிற்கு தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது, கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

வைத்திய கலாநிதி
என். விவேகானந்தன்,
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்.

சுகாதார சேவைகள்-
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்-
பணிமனை.
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
07-05-1994 [சி 8100]

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

# விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடத்தும்

# கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும் கிராமிய ஆட்டக் கலை விழாவும் விண்ணப்பப் படிவம்

1) பங்குபற்றும் அமைப்பின் பெயர்: ..............................

2) முகவரி: ..............................

3) கோட்டத்தின் பெயர்: ..............................

4) நாடகத்தின் தன்மை.
அ ..............................
ஆ ..............................
இ ..............................
ஈ ..............................

5) கிராமிய ஆட்டக்கலை:
அ ..............................
ஆ ..............................
இ ..............................
ஈ ..............................

இப்போட்டிகளின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

..............................
விண்ணப்பதாரின் கையொப்பம்

(சி-8157)

# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். கோட்டம்

## சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான முக்கிய அறிவித்தல்

யாழ் கோட்டம் பொதுச்சபைக் கூட்டம் முக்கிய விடயங்கள் தொடர்பான ஆலோசனைக்காக 18-05-94 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தில் (எழிலகம் முன்பாக) நடைபெறவுள்ளது. சகல கல்வி நிறுவனங்களினதும் இயக்குநர்களும், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

செயலாளர்
யாழ். கல்விக் கோட்டம்.
(சி-8162)

# ஈச்சமோட்டை சனசமூக நிலைய 52வது ஆண்டு விழாவை யொட்டிய விளையாட்டுப் போட்டிகள்

✲ மென்பந்து கிரிக்கெட் (7பேர் 12 ஓவர்கள்)
✲ கரப்பந்தாட்டம் (ஓவர் கேம்)
✲ 5 கமல் மரதன் ஓட்டப்போட்டி

விண்ணப்பக் கட்டணம் ரூபா **50/-**

மரதன் ஓட்டம் ரூபா **10/-**

விண்ணப்ப முடிவு திகதி 23-05-94

குறிப்பு:
விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து கொடுக்கும் பொழுது விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும்

தொடர்புகள்; கப்டன்
D. A. M. குணசிங்கம்.
61, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம் (30915)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்க

யாழ். கிளையின் சாவகச்சேரி பிரிவு

நடத்தும்

## 94 க. பொ. த. உயர்தர வகுப்பு

பரீட்சைக்குத் தோற்றும்

## கலை, வர்த்தக, விஞ்ஞான, கணித மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு

தலைப்பு: வினாவுக்கு விடையளித்தல்

காலம்: 24-05-94 செவ்வாய் ] காலை 8 தொடக்கம்
25-05-94 புதன் ] மாலை 4 வரை

இடம்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

துறைசார் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் கருத்துரை வழங்குவார்கள்

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 21-05-94இற்கு முன்னர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க முதலுதவி நிலையம், நவீன சந்தை சாவகச்சேரியில் காலை 9மணி தொடக்கம் 12 மணி வரை அல்லது பணியகத்தில் பதிவு செய்து கொள்ளவும்

கௌரவ செயலாளர்,
இ. செ. ச. சாவகச்சேரிப் பிரிவு

பணியகம்,
மில் வீதி,
மீசாலை கிழக்கு சாவகச்சேரி. [30919]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 17 — 04 — 1921

இறப்பு: 17 — 04 — 1994

## அமரர் முருகேசு பொன்னம்பலம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் -
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் -
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் -
இருக்க என்றார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து,
அவனருளாலே அவன்தாள் வணங்கி,
அபிராமி அன்னையைப் போற்றிப் பாடி,
பிறப்பு இறப்பு இல்லாப் பேரின்பப் - பெரு
வாழ்வையடைந்த எம் அன்பு நிறைந்த
ஐயாவே! நீங்கள் வானுறையும்
தெய்வமாக தோன்றாத்துணையாக
எங்களுக்கு அருள்புரிய வேண்டுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17-05-94) காரைநகரில் நடைபெறும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமதி சோ. சுந்தரலட்சுமி (பவளம்),
192/6, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (39005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/3, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பழி ஓர் இடம்; பாவம் வேறிடமா?

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சர் திரு பி. தயாரத்னா இனப்பிரச்சினை சம்பந்தமான சில உண்மையான கருத்துக்களை முன் வைத்திருக்கிறார்.

இரத்தினபுரியில் பொதுக் கூட்டம் ஒன்றில் இனப்பிரச்சினை தொடர்பாக அவர் நீண்ட உரை ஒன்றை ஆற்றி இருக்கிறார். அதில் சிங்களத் தலைவர்கள் விட்ட தவறைச் சரியாக சுட்டிக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினையைத் தோற்றுவித்தவர்கள் சிங்களத் தலைவர்களே என்பது வரலாறாகும். தமது அரசியல் லாபம் கருதி— தாம் ஆட்சி பீடத்தில் அமர்ந்து சுகபோகம் அனுபவிக்கவேண்டும் என்பதற்காக — தேர்தலில் இலகுவில் வெல்வதற்காக சிங்கள மக்கள் மனங்களில் இனத்துவேசம் என்ற நச்சு விதையை விதைத்தவர்கள் சிங்களத் தலைவர்களே.

அந்த நச்சு விதைக்கு, மாறி மாறி பதவிக்கு வந்த பிரதான சிங்களக் கட்சிகள் இரண்டினதும் தலைவர்கள் காலம் தவறாது தண்ணீரும், உரமும் வைட்டி வளர்த்தார்கள். அதுவே இப்போது பெரு விருட்சமாகி இந்த நாட்டில் இரத்தக் களரியை விழுதாக விட்டிருக்கிறது.

இத்தனைக்கும் பின்னர் நாடே அழியும் கட்டம் வந்து விட்டபோதிலும் நச்சு விருட்சத்தை வெட்டி எறிய விருப்பம் இல்லாமல், அதை மேலும் பெருக்க வைக்கும் விதத்தில் செயற்படுகிறார்கள். இரத்தக் களரி என்ற விழுதை வெட்டி எறிவதற்குக் கூட விரும்புகிறார்கள் இல்லை!

எனவே, சிங்கள மக்கள் தங்கள் மனங்களில் இருந்து இனவாதத்தை ஒதுக்கவேண்டும் என்று அமைச்சர் தயாரத்னா கேட்பது, அவர்களினால்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாமல் இருக்கிறது என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. எய்தவன் இருக்க அம்பை நோகும் முட்டாள்தனம் இது. சிங்களத் தலைவர்கள் செய்த பாவத்துக்கு மக்கள் மீது பழியைப் போடுவதாகவும் அமைகிறது.

இப்பாவத்தை, அப்பாவிச் சிங்கள மக்களால் கழுவ முடியாது. ஒவ்வொருவரும் தாம் இழைத்த பாவத்தைக் கழுவுவதற்குத் தாமே பிராயச்சித்தம் செய்ய வேண்டும். ஒருவர் செய்த வினையை சம்பந்தப்பட்ட அதே நபரே போக்குவது என்பது மிகவும் கடினமான காரியம். முன்னர் இழைத்த வினைக்கு, உரிய விளைவைப் பின்னர் அனுபவித்தே ஆகவேண்டும். அவ்வாறிருக்க ஒருவர் செய்த பாவத்துக்கு மற்றவர் பிராயச்சித்தம் செய்ய முடியுமா?

இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளே— தங்கள் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும். தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகளை வழங்கும் வகை செய்யும் தீர்வு ஒன்றை இரு சாராரும் சேர்ந்து உருவாக்க வேண்டும். இரண்டு கட்சிக்காரர்களும் இந்த விடயத்தில் போட்டி போடாமல் ஒன்றிணைந்து ஒரு நல்ல தீர்வை உருவாக்கினால் சிங்கள மக்கள் எதிர்க்கவா போகிறார்கள்? தலைவர்கள் தூண்டிவிடாமல் மக்கள் குழம்பப் போவதில்லை!

இதுவரை விட்ட தவறை உணர்ந்து, எதிர்வரும் தேர்தலை முன்னிட்டாவது தங்களைத் திருத்திக் கொண்டு தமிழர் பிரச்சினைக்கு ஒரு மித்த போதுவான தீர்வை முன்வைப்பார்களா?

வடக்கு—கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்பதில் ஒத்த கருத்துடைய இரு தரப்பினராலும் தமிழர் பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதே உண்மையாகும் ஏன், தயாரத்தினா கூட தமது இரத்தினபுரிப் பேச்சில் முன்னரைப் போல நாட்டில் ஒன்பது மாகாணங்களே இருக்க வேண்டும் என்று அழுத்திக் கூறியிருக்கிறார்.

இத்தகைய கருத்துடைய சிங்களத் தலைவர்களால் தமிழர்கள் ஏற்கக்கூடிய ஒரு தீர்வை எப்படி உருவாக்க முடியும்? அதனால் சாதாரண சிங்கள மக்கள் தலையில் பழியைக் கட்டி அடிக்க முனைகிறார்கள்.

# கல்வி நிர்வாக அதிகாரிகளுக்கு வடக்கு - கிழக்கில் பற்றாக்குறை

## அலுவல்கள் பாதிப்பு என ஆளுநரிடம் அறிக்கை

திருகோணமலை, மே 17

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கல்விச்சேவை நிர்வாக அதிகாரிகள் மட்டத்தில் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதனால் மாகாண அலுவல்களின் பின்னடைவு ஏற்படுவதாகவும் மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோவுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது

மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் வால்டர் நாணயக்கரா இதனை மாகாண ஆளுநரிடம் அறிக்கை வாயிலாக சுட்டிக் காட்டியுள்ளார்.

71 பிரதேச செயலகங்களைக் கொண்ட பத்து கல்வி வலயங்களாக வடக்கு-கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டுள்ளது.

இம்மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இம்மாகாணத்தில் முதலாம் வகுப்பு கல்வி அதிகாரிகளுக்கான 17 வெற்றிடங்கள் உண்டு இவற்றுக்கு ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை. மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்கள் பதவி இரண்டு, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பதவிகள் பதினொன்று, கல்லூரி அதிபர் பதவிகள் மூன்று ஆகியன நிரப்பப்பட வேண்டியுள்ளன.

இம் மாகாணத்திற்கு இரண்டாம் வகுப்பு பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக 71 பேர் தேவைப்படுகின்றனர். ஆனால் 36 நிரந்தர பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளனர். இவர்களில் 21 பேர் பதில் அதிகாரிகளாக கடமை புரிகின்றனர். இன்னும் 14 பேரின் இடங்கள் காலியாக உள்ளன.

105 உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் இம்மாகாணத்தில் உள்ளன. ஆனால் 15 பேரே பணிபுரிகின்றனர். 90 உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் காலியாக உள்ளன.

இம்மாகாணத்துக்கு மூன்றாம் வகுப்பு பிரதேச மேலதிக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் 71 பேர் தேவைப்படுகின்றனர். ஆனால் 5 பேரே தற்சமயம் கடமையாற்றுகின்றனர். இன்னும் 66 பேர் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ மாகாண ஆளுநரிடம் தெரிவித்துள்ளார். (இ-எ)

### திருமலை விவசாயிகளுக்கு

## பொலீஸார் முன்னிலையில் யூரியா விநியோகம்

கொழும்பு, மே 17

திருகோணமலை மாவட்டத்தில் பொலீஸாரின் மேற்பார்வையில் 50 மெட்ரிக் தொன் யூரியா பசளையை விவசாயிகளுக்கு வழங்க உரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்புக் காரணமாக யூரியா பசளை விநியோகம் திருமலை மாவட்டத்தில் பல ஆண்டுகளாகத் தடை செய்யப்பட்டிருந்தது.

இப்போதுதான் முதல் தடவையாக யூரியா பசளை திருமலை மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட விருப்பதாகவும்—

முதலில் திருமலை நகரப்பகுதி, தம்பலகமம், முள்ளிப் பொத்தானை மற்றும் மூதூர் பகுதிகளில் உள்ள விவசாயிகள் யூரியாவை பெற முடியும் என்றும்— கூட்டுத்தாபனத்தின் வடக்கு-கிழக்குப் பிராந்திய முகாமையாளர் எஸ். சிதம்பரநாதன் தெரிவித்தார். (இ-எ-17)

### கிழக்கில் அரசு நியமனங்கள்:

## 10 வருடங்கள் பணிபுரிய விரும்பினால் முன்னுரிமை

கொழும்பு, மே 17

கிழக்கு மாகாணத்தில் அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் போது அங்கு தொடர்ந்து பத்து வருடங்கள் பணிபுரிய முன்வருவோருக்கு முன்னுரிமை வழங்குவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தை மூன்று மாதங்களுக்குள் நடைமுறைப் படுத்துவது என்றும் அமைச்சரவை முடிவு செய்தது.

நியமனம் வழங்கப்படும் போது விண்ணப்பதாரர் தொடர்பாக சம்பந்தப்பட்ட பகுதியின் சிரேஷ்ட பொலீஸ் அதிபரின் அறிக்கையைப் பெறுவது என்றும்—

விண்ணப்பதாரரை சேவையில் உறுதிப்படுத்தும்போது தேசிய புலனாய்வு பாதுகாப்பு பிரிவிடம் [illegible] அறிக்கையைப் பெறுவது என்றும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பொலீஸ் நிலையங்கள் மற்றும் அரச திணைக்களங்கள் முறையாக செயற்படாததால் நியமனம் வழங்கும் போது புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கையை பெற முடியாதுள்ளது. இதனால் காலதாமதம் ஏற்படுவதுடன் சிவில் நிர்வாக முறையும் பாதிப்படைகின்றது

இதனைக் கருத்திற்கொண்டே அமைச்சரவை இவ்வாறு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## கல்குடா சிங்கள மீனவருக்கு நிவாரணம் நிறுத்தப்பணிப்பு

கொழும்பு, மே 17

கல்குடாவில் தங்கியுள்ள சிங்கள மீனவ அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக நிறுத்துமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலர் வாமைச் சேனை பிரதேச செயலரைப் பணித்துள்ளார்.

1990 இல் இடம் பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த கல்குடா மீனவர்கள் நிலைமை சீரடைந்ததும் மீண்டும் கல்குடா திரும்பி அகதிகளாக கல்குடா சந்தியிலுள்ள தமிழர்களின் வீடுகளிலும் தம்பு நிலையத்திட்டத்திலும் தங்கியிருந்தனர். தமது சொந்த இடங்களில் தனியான இராணுவமுகாம் அமைந்தாலே அங்கு செல்ல முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மீளக்குடியேற்ற கொடுப்பனவு, தொழில் பாதிப்பு கொடுப்பனவு ஆகியவை வழங்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு 3 மாதத்திற்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சு அண்மையில் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து இவர்களுக்கான நிவாரணத்தை நிறுத்தும்படி பணிக்கப்பட்டுள்ளது. (த)

## "பாதாள உலகம்" இருந்தால் பொலீஸாரே காரணம்!

### சிரேஷ்ட பொலீஸ் அதிபர் கூறுகிறார்

கொழும்பு, மே 17

கொழும்பில் பாதாள உலகம் ஒன்று உண்டா? அப்படி ஒரு 'உலகம்' இருப்பின் அது பொலீஸார் விட்ட தவறினால்தான் இருக்கும்.

நீர்கொழும்புப் பிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அதிபர் எடிஸன் குணதிலக முன்கண்டவாறு தெரிவித்தார்.

"எனக்குத் தேவை சொத்தி உபாலி மட்டுமே; உபாலியின் கூட்டாளிகள் அல்ல. பொலீஸார் சரியாக இயங்கும் இடங்களில் 'பாதாள உலகம்' இருக்காது" — என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை — சொத்தி உபாலி கட்டுகஸ் தோட்டையில் வைத்து கைது செய்யப்பட்டார் என்பது பற்றி தமக்கு முதலில் அறிவிக்கப் படவில்லை என்று தெரிவித்த பொலீஸ் அதிபர் குணதிலக, சொத்தி உபாலியை விசாரிக்க பொலீஸ் குழு ஒன்றை அனுப்பப் போவதாகவும் தெரிவித்தார். (த-எ)

## குடாநாட்டில் போசாக்கின்மை; சிறுவர் மரணங்கள் அதிகரிப்பு

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களின் உள்ளிட்ட கடந்த காலாண்டு பகுதியில் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற சிசுக்களின் மரண வீதத்தில் போசாக்கின்மையால் இறந்த குழந்தைகளின் குடும்பங்களின் எண்ணிக்கையே அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் 82 சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் 19 குழந்தைகள் போசாக்கின்மையால் இறந்துள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் [illegible] சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே கூடுதலான சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இங்கு மட்டும் 24 சிசுமரணங்கள் இடம்பெற்றுள்ளன.

நிமோனியாவினால் 9 பேரும், மூச்சடைப்பால் 8 பேரும், [illegible]ால் 6 பேரும் இறந்துள்ளனர் [illegible]

## நீண்ட தூர ஏவுகணைகளை பாகிஸ்தான் தயாரிக்கிறது

இஸ்லாமபாத், மே 17

பாகிஸ்தான் நீண்ட தூர ஏவுகணை தயாரிப்பில் 1991 முதல் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

பாகிஸ்தானின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஆஸ்லம் பெக் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பாகிஸ்தான் இரண்டு குறுகிய தூர ஏவுகணைகளை வெற்றிகரமாகத் தயாரித்துள்ளது. ஒரு ஏவுகணை 50 மைல்கள் செல்லக் கூடியது அடுத்தது 190 மைல்கள் வரை சென்று இலக்கைத் தாக்கக் கூடியது.

சீனாவின் உதவியுடனே பாகிஸ்தான் ஏவுகணை தயாரிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது என்றும் ஜெனரல் பெக் தெரிவித்தார்,

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டுள்ள சமயத்தில் பாகிஸ்தானின் முன்னாள் இராணுவத் தளபதியின் பேட்டி வெளியாகி இருக்கிறது. (இ-எ)

### புலிகளின் குரல் வானொலியில்

17 - 05 - 1994

செவ்வாய் இரவு

- ★ 8-01—ஊர்சுற்றும் ஒளிவாங்கி
- ★ 8-10 அறிந்து கொள்ளுங்கள் தகவல் களஞ்சிய நிகழ்ச்சி
- ★ 8-20 — நலந்தானா? தொண்டையில் ஏற்படும் நோயும், புற்று நோயும் அவை பற்றிய ஆலோசனைகளும்
- 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் "விலை"
- ★ 8-50—களமும் கானமும் "காற்றாய் கடவையம்"

18 - 05 - 1994

புதன் காலை

- ★ 7-02 மாவீரவணக்கம்
- ★ 7-15— நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40—தொடர்ந்து நீங்கள் கேட்டவை

### பகுதி நேர அடிப்படையில்

## ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 17

யாழ் கல்வித் திணைக்களம் வலயம் ஒன்றிற்குட்பட்ட பாடசாலைகளில் பகுதிநேர அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக சேவையாற்ற, 65 வயதுக்கு மேற்படாத ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஆங்கிலம் கற்பிக்க தகுதியுடைய ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தகுதியுடையவர்களிடமிருந்து வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் விண்ணப்பங்களை கோரியுள்ளார்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் —

மேலதிக விபரங்களையும் மாதிரி விண்ணப்படிவத்தையும் யாழ் கல்வித் திணைக்களம் வலயம் ஒன்றுக்கு அலுவலகத்திலும் யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, வேலணை, ஊர்காவற்றுறை கோட்ட கல்வி அலுவலகங்களிலும் பார்வையிடலாம் என்றும் — அறிவிக்கப்படுகின்றது [உ-த]

### கிழக்கில் கைதான

## 22 தமிழ்க் கைதிகள் சார்பில் அடிப்படை உரிமைமீறல் மனு

கொழும்பு, மே 17

கடந்த வருடத்தில் கிழக்கு மாகாணத்தில் காரணம் கூறப்படாது கைதாகி, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாது, மட்டுநகர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 22 தமிழ்க் கைதிகள் சார்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமை நிலையம், அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கையின் ஆரம்பமாக, கைதிகளின் கையெழுத்தை அவர்களின் சத்தியக் கடதாசியில் பெற்றுள்ளது.

கடந்த வாரம் மட்டுநகர் சிறைச்சாலைக்குச் சென்ற சட்டத்தரணிகள் இருவர் கைதிகளின் கையெழுத்தைப் பெற்றனர்.

கைதிகளில் சிலர் தமக்கு சித்திரவதை செய்யப்பட்டது குறித்து சத்தியக் கடதாசிகளில் குறிப்பிட்டுள்ளனர். (ஓ)

## போதனாசிரியர் பிரிவுரீதியாக விவசாய பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், மே 17

விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக விவசாயப் பயிற்சி வகுப்புக்களை நடத்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

இந்த வகையில் இம்மாதம் 19ஆம் திகதி உடுவில் பிரிவில் பிற்பகல் 2 மணிக்கு சுந்நாகம் ரோடை சந்தையா வித்தியாசாலையிலும், பளைப்பிரிவில் பிற்பகல் 3மணிக்கு மாசார் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும், 20ஆம் திகதி பளைப் பிரிவில் காலை 10 மணிக்கு சோரன்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத்திலும், புலோலிப் பிரிவில் மாலை 3 மணிக்கு தம்பசிட்டி பாடசாலையிலும், நல்லூர்ப் பிரிவில் சாதனா பாடசாலையிலும் — 26ஆம் திகதி காலை 10 மணிக்கு தொல்புரம் பிரிவில் தொட்டிலடி கல்வி நிலையத்திலும், கைதடிப் பிரிவில் கைதடி மத்தி சந்திபுரம் சிவன் கோயிலடி சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும், 31ஆம் திகதி மாலை 3 மணிக்கு சண்டிலிப்பாய் சனசமூக நிலையத்திலும், சாவகச்சேரிப் பிரிவில் காலை 9 30மணிக்கு மீசாலை ஐ. நா. சங்க சனசமூக நிலையத்திலும் இப்பயிற்சி வகுப்பை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

மாதாந்தம் தொடர்ச்சியாக நடைபெறவிருக்கும் இப் பயிற்சி வகுப்புகளில் சகல விவசாயிகளையும் உற்பத்திக் குழுக்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது (எ)

## பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், மே 17

பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப்பேருரை நாளை புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

டாக்டர் டி. ஜே. சோமசுந்தரம் "தன்னாதிமானவதி [illegible] அனையும் மனிதன்" எனும் பொருளில் உரைநிகழ்த்துவார். (அ)

### இனப்பிரச்சினைத் தீர்வு;

## லக்ஷ்மன் தலைமையிலான சு.க. குழு ஆராய்கிறது

கொழும்பு, மே 17

இனப்பிரச்சினைக்கு தீர்வாக யோசனைத் திட்டம் ஒன்றை தயாரிப்பது தொடர்பான ஆய்வுகளை சுதந்திரக் கட்சியின் குழு ஒன்று மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவுக்கு சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் ஜெயக்கொடி தலைவராக இருக்கிறார்.

இத்தகவலை தம்மைச் சந்தித்த ஈ. பி. ஆர். எல். எப். தூதுக்குழுவினரிடம் மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா வெளியிட்டார்.

"இக்குழு கட்சிக்கு சமர்ப்பிக்கும் யோசனைத் திட்டத்தை நாம் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளிடம் முன்வைத்து அவற்றின் அபிப்பிராயத்தைப் பெறுவோம். அதன் பின்னர் சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அந்த யோசனைகளை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்" — என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவது அவசியமாகிறது. அதற்கான யோசனையை சுதந்திரக் கட்சி முன்வைக்க தயங்கப் போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

இனப்பிரச்சினையை பயன்படுத்தி அரசியல் லாபம்பெற முடியாது என்பதை தென் மாகாண சபைத் தேர்தலில் மக்கள் நிராகரித்து விட்டனர் என்றும் அவர் கூறினார். (இ-எ)

## இரங்கற் திருப்பலி

யாழ்ப்பாணம், மே. 17

பொதுவைத்திய தாதிகள் சங்க யாழ். கிளையின் முன்னாள் தலைவர் அமரர் திரு ஆர். கே. ஜோசேப்பின் முதலாம் ஆண்டு நினைவாகவும், அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகவும் நாளை மறுதினம் வியாழன் முற்பகல் 11 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்பு கொடுக்கப்படும். (ஒ)

## தெற்கில் தினசரி ஹெலி சேவை

கொழும்பு, மே 17

இலங்கையில் முதற்தடவையாக கால அட்டவணை ரீதியிலான ஹெலிக்கொப்டர் சேவை ஒன்றை தனியார் கம்பனி ஒன்று ஆரம்பிக்கவுள்ளது.

"லங் எயார்" தனியார் நிறுவனம் ஆரம்பித்துள்ள இந்த சேவைக்கு இலங்கை முதலீட்டுச் சபை [அங்கீகாரம்] அளித்துள்ளது

இந்த ஹெலிக்கொப்டர் சேவைகள் கொழும்பில் இருந்து காலையில் ஆரம்பித்து மாலையில் மீண்டும் கொழும்பை நோக்கி மேற்கொள்ளப்படும்.

கொழும்பில் இருந்து காலி, உடவளவை, ஹிக்கடுவ, நுவெரெலியா, கண்டி, பொலன்னறுவை உட்பட பல இடங்களுக்கான ஹெலி சேவை அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து ஆரம்பமாக உள்ளது

ரஷ்யாவில் இருந்து தருவிக்கப்பட்ட இரண்டு ஹெலிக்கொப்டர்கள் இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன ரஷ்ய விமான ஓட்டிகள் இந்த ஹெலிகளைச் செலுத்துவர். (2-5)

## செஞ்சிலுவைக்குழு பலாலிக்கு

வடமராட்சி, மே 17

யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் குழு ஒன்று இன்று பலாலிக்கு செல்லவுள்ளது.

படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிப்பது உட்பட மற்றும் பல விடயங்கள் குறித்து படை அதிகாரிகளுடன் மேற்படி குழுவினர் பேச்சு நடத்த உள்ளனர். (உ-173-5)

### டி - பியிா தேர்தல்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது

எதிர்வரும் தேர்தலில் தமது வெற்றியை உறுதிப் படுத்துவதற்காக இதுபோன்ற கூட்டங்களை மாவட்டம் தோறும் ஜனாதிபதி நடத்தவிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் சிலபிரிவினர் திரு. விஜேதுங்காவுக்கு ஆதரவளிக்காவிடினும், ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றியீட்டுவார் என்று ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இத்தேர்தலில் காமினி திஸநாயக்கா முக்கிய பங்கு வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ-6]

### தென்னாபிரிக்கா......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது

சட்ட, சமூக நம்பிக்கை பொறுப்பு நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கலாநிதி நீலன் திருச்செல்வம், லேக்ஹவுஸ் தலைவர் சரத் அமுனுகம, தென்னாபிரிக்க தேர்தலைக் கண்காணித்த காமன் வெல்த் குழுவில் அங்கம் வகித்த சிவில் குணரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திரிகா குமாரணதுங்க மேலும் பேசுகையில் —

தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவும் டி கிளேர்க்கும் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

இந்த அம்சம் எமது நாட்டுக்கும் மிகவும் முக்கியமானது.

எமது நாட்டின் பிரச்சினைக்குரிய இரு தலைவர்களும் தமக்கிடையே கட்சி, இன மத வேறுபாடுகளை மறந்து பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

இப்படி சந்திரிகா கூறினார். (இ)

**எதிர்காலம் இளைப்பாற நடுவோம் மரக்கன்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலிகள்



வைத்திய கலாநிதி
**செல்வி வசந்தகுமாரி வைத்திலிங்கம்**
(போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

பிறப்பு: 26-05-1961 இறப்பு: 13-05-1993
திதி: 17-05-1994

ஓராண்டு சென்றாலும் உன் கோலம் மாறாது
ஓர்யுகம் கழிந்தாலும் எம் மனங்கள் ஆறாது
சீக்கிரமே வந்திடம்மா மனத்துயரம் தாங்கவில்லை
சித்திரமாய் நீ நடந்து உன்சேவை தான் தொடர

சொர்க்கமே எமக்கு சொந்தமாய் வந்தாலும்
உனக்கது ஈடாகுமா எம்துயரம் தீருமா
கலாநிதி வசந்தாவே கடவுளுக்கு கருணையில்லை
வசந்தமாய் வந்திடம்மா சாந்தி பெற்றிடவே.

உன் பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்.

(30925)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லைநாயகி கேதீஸ்வரதாசன்

யாழ். நாயன்மார்கட்டைச் சேர்ந்த நல்லைநாயகி கேதீஸ்வரதாசன் கொழும்பில் கடந்த 11-05-94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. கேதீஸ்வரதாசனின் அன்பு மனைவியும், இராதாகிருஷ்ணன், கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணவதனி, கிருஷ்ணானந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், மு. நடராசா, செ. சவுந்தரராசா, இ. ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோநாயகம், கமலநாதன் கமலவேணி ஆகியோரின் சிறிய தாயாரும், ஹரன், கீர்த்தி, ரம்யா, அர்ச்சனா, செழியன், தனசி, சஜீதரன், முகுந்தன், முரளீதரன், சசிதரன், சிந்து ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. கமலநாதன்
செ. சவுந்தரராசா

32/12, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(ஒ/8164)

### மருதகுட்டி இராஜசிங்கம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

சண்டிலிப்பாய் ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தாவடி வாசியுமான திரு. ம. இராஜசிங்கம் நேற்று (16-05-94) காலமானார்.

இவர் மருதகுட்டி — நாகம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களாகிய கந்தையா, கணபதிப்பிள்ளை, சேயசுந்தரம், சின்னையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி இராசக்தியின் அன்புக் கணவரும், திரு. சண்முகஜோதி (ஜேர்மனி), திரு. நரேந்திரா (ஆசிரியர், உருப்பிராய் இந்துக் கல்லூரி), திரு. சுந்தரராஜன் (கணக்காளர், கொழும்பு), திரு. இரவீந்திரன் (சவுதி), செல்வி இராஜலக்சுமி, திரு. ஸ்கந்தராஜா (B.Sc.) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி விக்கினேஸ்வரி நரேந்திராவின் (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி) மாமனாரும், உஷேனியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-5-94) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் தாவடியில் நடைபெறும்.

தகவல்:
திரு. இ. நரேந்திரா

"சக்திவாசா"
தாவடி வடக்கு
கொக்குவில்

(30922)

### ஆறுமுகம் தில்லையம்பலம்

வல்வெட்டித்துறை புளியடியைப் பிறப்பிடமாகவும் தொண்டமானாறை வசிப்பிடமாகவும் கொண்டவரான ஆறுமுகம் தில்லையம்பலம் (பலாலி பென்சனியர்) 15-05-94 (ஞாயிறு) இல் காலமாகிவிட்டார்.

ஈமக்கிரியைகள் 16-5-94 இல் (திங்கள்) நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி ஜா. தில்லையம்பலம்

பிள்ளையார் கோவிலடி,
தொண்டமானாறு

(30924)

## இன்று

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் குருபூசை தினம் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் பரமானந்த வல்லி அம்பாள் ஆலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும். (த-3)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளின் சுகாதார வார விழா நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபர் க. இளையதம்பி தலைமையில் நடைபெறும். (த-117)

## நாளை

தமிழ்மொழி மூல ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றும் பளைப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகள் நாளை புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு பளை மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

பளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் இவ்வழிகாட்டல் வகுப்புகள் நடத்த ஒழுங்குகள் செய்துள்ளது. (ஒ-117)

★ ★ ★

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள சங்கானை பிரதேச பாடசாலை மாணவர்களின் நலன்கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாதிரிப் பரீட்சைகள் மற்றும் பயிற்சி வகுப்புகளில் முதலாவது மாதிரிப் பயிற்சி வகுப்பு நாளை புதன்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, விக்டோறியாக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறும். (த-152)

★ ★ ★

சண்டிலிப்பாய், தெல்லிப்பளை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் 1.2.1989 முதல் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி இதுவரை நியமனம் பெறாதவர்களை —

அவர்களின் கல்வித் தகைமை சான்றிதழ்கள், கல்வித் திணைக்களத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களின் பிரதிகள், பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதங்கள் ஆகியவற்றுடன் —

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உள்ள கோட்டக் கல்விப் பணிமனையில் சமுகமளிக்குமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஏ)

### பாடசாலைகளில்

எழுதுமட்டுவாழ் அமெரிக்க தமிழ் கலவன் பாடசாலையின் தமிழ்மொழி கலைத் திறன் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை அதிபர் திரு. ஜ. சின்னையா தலைமையில் நடைபெறும். (க-30)

### கணிதபாட ஆசிரியருக்கு

யாழ். கல்வி வலயம் ஒன்றிற்கு உட்பட்ட பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கணிதம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் நாளை புதன் பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (த)

### கப்பலில் செல்லும் நோயாளிகள் கவனத்திற்கு

கப்பலில் பிரயாணம் செய்ய தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளையும் அவர்களது உதவியாளர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை 1 மணிக்கு தங்களுக்கு தேவையான உணவு தண்ணீருடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்கும்படி பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.


**SPOKEN ENGLISH**

By
R. SIVALINGAM
(Dip in-Eng)

ஆரம்பம்:
18-05-1994
புதன் காலை 10-00 மணி

புதிய அங்கில கல்வி நிலையம்
ஆரியகுளம,
யாழ்ப்பாணம்.

(20 பிள்ளைகள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்)

(30920)


## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கோட்டப் பாடசாலைகளின் வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3.30 மணி முதல் கொக்குவில் மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறவுள்ளன.

யாழ் நல்லூர் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ் மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் கலந்து கொள்வார். பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

யாழ் கோட்டம்

★ 17 வயதுப் பிரிவு:- கொக்குவில் மகளிர் கல்லூரி எதிர் யாழ். கன்னியர்மடம் ம.வி.

★ 19 வயதுப் பிரிவு:- யாழ் கன்னியர்மடம் ம.வி. எதிர் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்.

நல்லூர் கோட்டம்

★ 17 வயதுப் பிரிவு:- கனகரத்தினம் ம.ம.வி. எதிர் இந்து மகளிர் கல்லூரி

★ 19 வயதுப் பிரிவு:- கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கனகரத்தினம் ம.ம.வி.

★ ★ ★

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் சுற்றுப் போட்டிகளில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

காற்பந்தாட்டம் (ஒவர்)

★ 2.30 மணி:- நீர்வேலி வி. க. எதிர் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச.

★ 4.00 மணி:- கலைமதி வி. க. எதிர் சென் மேரீஸ் வி. க.

கரப்பந்தாட்டம்
"செற் அப்"

★ 4.30 மணி:- கோணதாஸ் வி. க. "பி" அணி எதிர் அரியாலை அணி

மென்பந்து கிரிக்கெட்

★ 3.30 மணி:- வேளாங்கன்னி வி. க. எதிர் சென் மேரிஸ் வி. க.

★ ★ ★

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் பி. விபுலானந்தன் கிண்ணத்துக்காக யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- ஜொனியன்ஸ் சிறுப்பு அணி எதிர் யாழ். பல்கலைக்கழக "ஏ" அணி.

★ 4.30 மணி:- ஜொனியன்ஸ் சிவப்பு அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் அணி.

### ஆலயங்களில்

சரசாலை நுணாவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் 3ஆம் நாளான இன்று இரவு 8-30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மெய்யியல் விரிவுரையாளர் திரு.க. சிவானந்தமூர்த்தியின் சமய சொற்பொழிவு இடம்பெறும். (த-30)

### பருப்பு விலை குறைப்பு

மைசூர் பருப்பின் விலை 15 ரூபாவினால் குறைக்கப்பட்டிருப்பதாக அரசு நேற்று அறிவித்தது. இதன்படி மைசூர் பருப்பின் சில்லறை விலை கிலோ 24 ரூபாவாகும். புதிய விலைநாட்டில் இன்று முதல் அமுலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-5)

### அதிபர்கள் கூட்டம்

நல்லூர் கோட்டத்தில் ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்புகளைக் கொண்ட -1 ஏபி, 1 சி வகை பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பிரதேசக் கல்விப் பணிமனையில் நடைபெறும். (க)

★ ★ ★

வேலணை ஊர்காவற்றுறை அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புங்குடுதீவு ம. வி. யில் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

★ ★ ★

யாழ் கல்வி வலயம் ஒன்றுக்கு உட்பட்ட — ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு பாடசாலைகளின் — அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

கூட்டத்தில் கலந்து கொள்ளும் அதிபர்களை கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தர தேர்வுக்கு விண்ணப்பித்த மற்றும் தோற்றிய சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை, உயர்தர வகுப்புகளுக்கு தகுதி பெற்ற மாணவர்களின் விவரம், தற்போது பாடசாலையில் உள்ள உயர்தர வகுப்புகளின் எண்ணிக்கை மற்றும் கல்வி கற்கும் மாணவரின் எண்ணிக்கை போன்ற விவரங்களை பிரிவு ரீதியாக அறிக்கைப்படுத்தி எடுத்து வரும்படி வலயம் ஒன்று கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (த)

### கரப்பந்தாட்ட கழகங்களின் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், மே 17

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கரப்பந்தாட்ட (ஓவர் கேம், செற்றப்) கழகங்களையும், யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது.

இச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்கள் மட்டுமே எதிர்காலத்தில் போட்டிகளில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படும் என்றும் —

பதிவு செய்ய வேண்டிய படிவங்களை செங்குந்தா இந்துக் கல்லூரியில் அல்லது 37, இராசவீதி கலியங்காடு என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (த)

### பயிற்சி முகாம்கள்

யாழ்ப்பாணம் மே 17

தென்மராட்சிப் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழக உறுப்பினர்களுக்கான உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்கள் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தென்மராட்சி விளையாட்டு இணைப்பாளர் திரு. வை. இராஜேஸ்வரனுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுள்ளது. (த)

### கூட்டம்

பிரதேச செயலகங்களில் பணியாற்றும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள் அனைவரையும் இம்மாதம் 20ஆம் திகதி கொழும்பு கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கொள்கை திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் வானொலிச் செய்தி மூலம் அறிவித்துள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

### டி. பியை தோல்வி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸாருக்கு அனுமதி வழங்கப்படுகின்றமை, சொத்தி உபாலியைக் கைது செய்தமை, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் ஆகியன காரணமாக பல அரசியல் வாதிகள் எதிர்வரும் தேர்தலில் ஒதுங்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

சுதந்திரக்கட்சித் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

எட்டு வருட இடைவெளியின் பின்னர் சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுக் குழு இம்மாதம் 23 ஆம் திகதி காலை 9 மணிக்குக் கூடும் என்று கட்சித் தலைமையகம் நேற்று அறிவித்தது.

இக்கூட்டத்தில் கட்சியின் புதிய அலுவலர்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் —

கட்சியின் அமைப்பு விதித் திருத்தங்கள் கூட்டத்தில் கொண்டுவரப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் கட்சியின் தலைவராகத் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே மீண்டும் தெரிவு செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் துணைத்தலைவர்களாக திருமதி சந்திரிகா குமாரணதுங்காவும், பேராசிரியர் ஜி. எல். பீரிஸும் தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்பு உண்டென்றும் கூறப்பட்டது.

இக்கூட்டம் அமைதியான சூழ்நிலையில் நடைபெறும் என்றும் கட்சிப் பேச்சாளர் நம்பிக்கை தெரிவித்தார். (உ-எ-6)

### பதில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டமிடும் ஆளும்கட்சி, இராணுவத்தின் இறுதித் தாக்குதலுக்கு உதவ புதிய நவீன போர் விமானங்களை வாங்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

—இவ்வாறு வெரித்தாஸ் வானொலி மேலும் அறிவித்தது. (உ-த)

### தேசியப் பட்டியல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகிறது.

விஜேதுங்காவும் காமினியும் ஒரே மாகாணம், ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கோஷ்டிப்பூசல் ஏற்பட்டுள்ள ஆளும் கட்சிக்குள் தமது பலத்தை நிறுத்திக் கொள்ள காமினியின் ஆதரவு விஜேதுங்காவுக்கு தேவைப்படுகிறது.

ஆனால் —

காமினியை அமைச்சராக்கும் தமது முயற்சியில் தாம் தோல்வியுற்றால் அது கட்சி அதிகாரத்தில் தமக்கு பலவீன நிலைக்குத் தள்ளிவிடும் என்பதை ஜனாதிபதி விஜேதுங்கா உணர்ந்திருக்கிறார்.

எனவே இவ்விடயத்தில் தமக்கு தோல்வி ஏற்படுவது உறுதி என்பது தெரியும் போது —

தமது தோல்வியை மறைப்பதற்காக முந்திக் கொண்டு நாடாளுமன்றத்தை அவர் கலைத்து விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேவை நலன் பாராட்டு விழா

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நீண்டகாலம் சேவையாற்றிய எமது சிரேஷ்ட விரிவுரையாளர்

### திருமதி ப. சண்முகராஜா

அவர்கள் 22-05-94 இல் இருந்து ஓய்வுபெறுகின்றார். அவர்களது சேவை நலன்களைச் சிந்தையில் நிறுத்தி பாராட்டிக் கௌரவிக்கு முகமாக எதிர்வரும் 20-05-94 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள விழாவில் பங்கேற்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி.

அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்.
கோப்பாய் அரசினர் ஆசிரிய
பயிற்சிக் கலாசாலை.

(சி/8165)

உ

## தசாகதின அழைப்பு

தமிழ்நாடு அருள்மிகு வேதாரணிய சுவாமி தேவஸ்தான பரம்பரைத் தர்மகர்த்தா சபைப் பிரதிநிதியும், கரவெட்டி,

வெல்லன் பிள்ளையார் கோயில்
பிரதம குருக்களும்,

கரணவாய்
வெற்றிக்காட்டுப் பிள்ளையார் கோயில்
பிரதம குருக்களும் ஆகிய,

08-05-1994 இல் சிவபதமெய்திய



### ஸ்ரீலஸ்ரீ கனகசபைக் குருக்கள் வேதாரணியக் குருக்கள்

அவர்களின்

### பாஷாண உத்தியாபனக் கிரியைகள்

(கல்லெடுப்பு)

18-05-1994 புதன்கிழமை காலை 7மணியளவிலும் சபிண்டீகரணம் 19-05-1994 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவிலும் நடைபெறும்.

உற்றார், உறவினர், சிஷ்ய பிள்ளைகள், அன்பர்கள் யாவரும் சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வேதாரணியக் குருக்கள் குடும்பத்தினர்.

கிராம்பத்தனை,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(30921)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை இமானுவல் ஜெயசிங்கம்

(மதுவரி அத்தியட்சகர்)

ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும், கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இமானுவல் ஜெயசிங்கம் (மதுவரி அத்தியட்சகர்) காலமாகிவிட்டார்.

இவர் ஆனந்தராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டேவிற் தம்பிராசா — திருமதி செல்வராணி தம்பிராசா ஆகியோரின் அருமைப் புதல்வனும், விஜயசிங்கம், விஜயராணி, ஜெசிந்தா நிம்மி, ஞானசிங்கம், மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், D.A.M. குணசிங்கத்தின் மருமகனும், கரவெட்டியைச் சேர்ந்த இராயப்பு தம்பதிகளின் மருமகனும் கனகராஜா, ஆனந்தராஜா, அருட்சகோதரி புஸ்பராணி (A.C.) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
T. P. விஜயசிங்கம்
[சகோதரன்]

11/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

[30926]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 865/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17-05-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org